RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22313

OPEN ACCESS

# மதுரை மருதன் இளநாகனாரும் சங்ககால நடுகல் பண்பாடும்

இரா. சவிதா [அ, *], பெ. ரேவதி [ஆ],

[அ] தமிழ்த்துறை, அரசு ஆடவர் கலைக்கல்லூரி, கிருஷ்ணகிரி- 635001, தமிழ்நாடு, இந்தியா.

[ஆ] தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி, சி. முட்லூர், சிதம்பரம்-608102, தமிழ்நாடு, இந்தியா.

# Madurai Maruthan Ilanaganar and the Nadukal Culture of the Sangam Age

R. Savitha [a, *], P. Revathi [b]

[a] Department of Tamil, Government Arts College for Men, Krishnagiri-635001, Tamil Nadu, India

[b] Department of Tamil, Government Arts College, C-Mutlur, Chidambaram-608102, Tamil Nadu, India

* Corresponding Author: tamilkarthik1998@gmail.com

Received: 12-02-2022
Revised: 04-05-2022
Accepted: 10-05-2022
Published: 05-07-2022

Check for updates

**ABSTRACT**

Ancient poets sang in many songs about the mediators taken for warriors in Sangam literature. Madurai Maruthan Ilanaganar, a contemporary of the Pandya king Nanmaran Valuthi, mentions his rare ideas about planting in six songs. This article explores the structure, developmental status of the mediators, the engraving, the imprinting of the human figure, the character of the engraver and the disintegration of the figure, the heroic deed of the opposing hero, and the implantation of messages about his heroism with the implant culture.

**Keywords:** Madurai Maruthan Ilanaganar, Culture, Nadukal, Sangam Literature

## முன்னுரை

தமிழர் பண்பாட்டில் நடுகல் வழிபாடு முக்கிய இடத்தைப் பிடிக்கிறது. நடுகல் வழிபாடு மூதாதையர் வழிபாடாகவும், வீரர் வழிபாடாகவும் விளங்கி வருகின்றது. இதன் தொன்மை பெருங்கற்காலத்தின் மத்திய காலத்திலிருந்து தொடங்குவதாகத் தொல்லியல் அறிஞர்கள் கருதுகின்றனர். சங்கப் புலவர்கள் பலரும் வெட்சி, கரந்தை வீரர்களுக்கு எடுக்கப்பட்ட நடுகற்களைக் குறித்துப் பல செய்திகளை வழங்கியுள்ளனர். மதுரை மருதன் இளநாகனார் பிற சங்கப் புலவர்களை விட அதிக பாடல்களில் நடுகல் செய்திகளைத் தந்துள்ளார். இவரது பாடல்களில் இருந்து அவர் காலத்தில் வழக்கிலிருந்த நடுகல் பண்பாடு குறித்த விவரங்களையும், நடுகற்களின் அமைப்பு வளர்ச்சி நிலை எழுத்துப் பொறிப்பு மனித உருவத்தை ஒத்த நடுகல், எழுத்துப் பொறிப்பு உருவமும் சிதைவடையும் தன்மையும், தொருமீட்ட வீரனின் வீர செயலும், அவன் வீரத்தைப் போற்றி எடுக்கப்பட்ட நடுகல் பற்றிய செய்திகளையும் நிகழ்கால நிலைக் குறித்தும் ஆராய்கின்றது.

## மதுரை மருதன் இளநாகனார்

இந்தியா முழுவதும் பெருங்கற்படை மற்றும் நடுகல் எழுப்பும் வழக்கம் மிகுந்து காணப்பட்டாலும் இவ்விரண்டு நினைவுச் சின்னங்கள் குறித்து தெளிவான விரிவான செய்திகளை முதலில் வழங்குவதாகச் சங்க இலக்கியம் விளக்குகின்றது. இது இவ்விலக்கியத்திற்கு உரியச் சிறப்பு தன்மை என்று கூறுகிறார் (Rajan, 2004). பாண்டிய மன்னன் நன்மாறன் வழுதியின் கால

சமகாலத்தவரான மதுரை மருதன் இளநாகனார் ஆவார். மருதன் இளநாகனாரும் மதுரை மருதன் இளநாகனாரும் வேறு வேறு புலவர்கள் என்றும் இறையனார் களவியல் உரைவகுத்தவர் என்றும் பாண்டியன் இலவந்திகை துஞ்சிய நன்மறனைப் பாடியவரே மருதன் இளநாகனார் என்றும் இவரே மருதக்கலியைப் பாடியவர் என்றும் டாக்டர் உ.வே. சாமிநாதையர் கருதுவர். இக்கருத்தினை அறிஞர்கள் மறுத்துள்ளனர்.

இவர் பாட்டு முதலியவற்றால் பெயர் பெற்ற சங்கப் புலவர்களுள் ஒருவர் என்று சமாசத்தார் குறிப்பிடுகின்றனர். இவர் மதுரையைச் சார்ந்தவர். ஆகவே, மதுரை மருதன் இளநாகனார் என அழைக்கப்படுகிறார். மருதன் என்பது இவர் தந்தைப் பெயராகவும் இருக்கக்கூடும். நிலங்களைப் பற்றிய கற்பனைகளும் உள்ளுறைகளும் வெளிப்படையான உவமைகளும் இவர் பாடல்களின் சிறப்பியல்புகளாகும். உண்மைக்குச் சூரியனை உவமை கூறியவர் இவர். வீரர்களின் பெயரும், புகழும் எழுதி நடப்பட்டிருக்கும் நடுகற்களைப் பற்றிச் சிறப்பித்துப் பாடியவர் இப்புலவர். பாலை பாடிய பெருங்கடுங்கோ பாலைத் திணையை மட்டும் பாடி அப்பெயர் பெற்றதுபோல இவர் மருதத்திணை மட்டும் பாடினாரல்லர். பிற திணைகளையும் பாடியுள்ளார். (அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு, கலித்தொகை - நூல்: அகம். 34, 59, 77, 90, 104, 121, 131, 184, 193, 206, 220, 245, 255, 269, 288, 297, 312, 350, 365, 380, 387. கலித்தொகை மருதக்கலி முழுவதும் குறுந்தொகை: 77, 160, 279, 367 நற்றிணை 21, 39, 103, 193, 216, 283, 290, 302, 326, 341, 362, 292, புறம்: 52, 55, 138, 139, 349) சங்கப்பாக்கள் மொத்தம் 79 பாடல்கள் பாடியுள்ளார். இதில், கலித்தொகையில் மருதக்கலியைப் பாடியவர் இவரேயாவார். பிற திணைப் பாடல்களைக் குறைந்தளவே பாடியுள்ளார். மருதத்திணைப் பாடல்கள் அதிகம் பாடிய காரணத்தினால் மருதன் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றிருக்கலாம். இவருடைய 79 பாடல்களிலிருந்து 6 பாடல்கள் மட்டுமே நடுகல் பற்றிய அரிய செய்திகளைப் புலப்படுத்துகின்றன.

இப்புலவர் பாண்டிவேந்தன்பால் பேரன்பும் பெருமதிப்பும் உடையவர். பாண்டிநாட்டு மக்கள் அயரும் விழாக்களையும் போர்த்திறங்களையும் பலபடியாகப் புகழ்ந்து பாடியுள்ளார். இவர் நாஞ்சில் வள்ளுவன், பிட்ட கொற்றவன், சிறுகுடிவாணன் ஆகிய தலைவர்களையும் கழுவுள் என்பானையும் கொங்கர், கோசர், மறவர் ஆகிய வீரமரபினரையும் பாராட்டியுள்ளார்.

## நடுகல்

பண்டைய நாளில் விழுப்புண் பட்டு உயிர்நீத்த வீரர்களைத் தெய்வமாகப் போற்றினர். அவர்களைக் கல்லில் வடித்து வழிபட்டனர் (Subramanian, 2009). சங்கப்பாடல் ஒன்று இதனையொட்டி நடுகல் வழிபாட்டிலும் சிறந்த வழிபாடு இல்லை என்று கூறுகிறது. (புறம்.335) இவ்வாறு, தெய்வமாகப் போற்றி எடுக்கப்பட்ட கல்லே நடுகல் என்று அழைக்கப்படுகின்றது. தமிழ் இலக்கண நூல்களும் இலக்கிய நூல்களும் இக்கருத்தினை நடுகல் அல்லது கல் என்று குறிப்பிட தற்காலத்தில் வீரக்கல் என்றும் நினைவுக் கல் என்றும் அழைக்கப்படுகின்றது. பிற்காலத்தில் சதிக்கல், தலைப்பலிக்கல், நவகண்டக்கல், நெடுநிலைக்கல், நிசிதிகைக்கல் என்ற பெயரிலும் சமூக நன்மைக்காக உயிர் நீத்தவர்கள், அரிய செயல் புரிந்தவர்கள், புகழ்ப்பெற்றவர்கள் போன்ற காரணங்களுக்காக எடுக்கப்பட்ட கற்களும் நடுகற்கள், வீரகற்கள் அல்லது நினைவுக்கற்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. இக்காரணங்களைச் சங்க இலக்கியமும் தொல்காப்பியமும் தெரிவிப்பது இல்லை என்பதால் மேற்கண்ட காரணங்கள் கொண்டு எடுக்கப்பட்ட நடுகற்கள் இப்பண்பாட்டின் பிற்கால வளர்ச்சி நிலையே என்று உறுதிச்செய்து கொள்ளலாம். இது பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நன்கு வளர்ச்சிப் பெற்று இருந்த இறந்தோர் வழிபாடும்; முன்னோர் வழிபாடும் என்று கூறுவதற்கு நன்கு பொருந்துகிறது. இவ்வழிபாடுத் தமிழரிடையே இன்றும் வாழும் பண்பாடாக இருப்பதையும் அறிய முடிகின்றது (Subramanian, 2009).

## மதுரை மருதன் இளநாகனார் காட்டும் நடுகல் பண்பாடு

மதுரை இளநாகனார் தம் பாடல்களில் நடுகல் பண்பாட்டின் பல நிலைகளை விளக்குகின்றார். நடுகல்லின் வளர்ச்சி குறித்து ஆய்வு செய்த தொல்லியல் அறிஞர்கள் தென்னிந்தியாவில் இரும்புக்

காலத்தில் மூதாதையர் நினைவுச்சின்னமாக எடுக்கப்பட்ட பெருங்கற்படைச் சின்னங்களின் தொடர்ச்சியாக உருவான சின்னமே நடுகல் என்ற முடிவிற்கு வந்துள்ளனர் (Rajan, 2004). பெருங்கற்படைச் சின்னங்களில் ஒருவகையான கல்பதுக்கை என்ற வகையுடன் இணைந்து நெடுநிலைக்கல் என்ற மிக உயர்ந்த கல்லும் அதன் தொடர்ச்சியாக உயரம் குறைந்த நடுகல் வகை சின்னம் எழுப்பப்பட்டது எனலாம். இதற்கு இலக்கியச் சான்றாக மதுரை மருத இளநாகனாரின் இவ்வகைப் பாடலைக் காணலாம்.

"நட்ட போலும் நடாஅ நெடுங்கல்

அகலிடங் குன்ற பல்பெயர் மன்னி"

இப்பாடலில் புலவர் நட்ட போலும் நடாஅ நெடுங்கல்லையும் அதில் செதுக்கப்பட்டுள்ள உருவங்களையும் குறிப்பிடுகின்றார். இங்கு 'நடாஅ நெடுங்கல் அகலிடம் குயின்ற என்று சுட்டப்படுவதால் இது பல்லவர் காலத்தில் இயல்பாக பாறையைக் குடைந்து படிவம் செய்யும் வழக்கம் இருந்ததுப்போலவே சங்ககாலத்திலும் இருந்தது என்ற செய்தியைப் பெறுகிறோம் (Krishnamurthy, 2004). 'பல்பெயர்' என்று ந.மு. வேங்கடசாமி நாட்டார் குறிப்பிடுவது இங்கு ஒப்பிடத்தக்கது (Venkatasamy Nattar, 1975).

"கடுங்கண் மறவர் பகழி மாய்த்தென

மருங்கள் நுணுகிய பேஎம் முதிர் நடுகல்

பெயர்பயம் படரத் தோன்றுகுயி லெழுத்து

இயைபுடன் நோக்கல் செல்லாது அசைவுடன்

ஆறுசெல் வம்பலர் விட்டனர் கழியும்" (Annamalai, 2004)

என்னும் பாடலில் வீரமிக்க மறவர் அம்பு தீண்டியதால் அந்நடுகல் ஆனது அச்சம் தரக்கூடியதாக மாறியது. வழிப்போக்கர்கள் கல்லில் உள்ள குயில் எழுத்துக்களை அல்லது உருவங்களைக் காண இயலாது தோற்றனர் என்று குறிப்பிடப்படுகின்றது. அம்பைக் கூர்மையாக்கிய காரணத்தால், நடுக்கல்லில் உள்ள எழுத்து அல்லது உருவத்தைக் காண முடியவில்லை என்கிறார்.

“மரங்கோ ளுமண்மகன் பேரும் பருதிப்

புன்றலை சிதைத்த வன்றலை நடுகற்

கூருளி போன்ற கோடுமா பெருமுத்தவ்

ஆறுசெல் வம்பலர் வேறுபயம் படுக்கும்” (Annamalai, 2004)

என்ற பாடலில், உப்பு வண்டிச் சக்கரங்கள் உராய்ந்து சிதைந்து, வலியப் பாறையில் உள்ள நடுகற்களில் கூரிய உளிகளால் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் ஆகிய அல்லது கோட்டு உருவங்கள் அழிந்த நிலையில் இருந்தமையால் வழிப்போக்கனுக்கு அவ்வுருவங்கள் விளங்காமல் வேறு பொருள் தருவதாக இருந்தது என்கிறார்.

நடுகற்கள் வலிமையாக ஆழமாக உறுதி உடையதாக நடப்பட்டதை மாலை வேளையில்\நேரத்தில் காலத்தில் மனித உருவத்தை ஒத்த நடுகல்லை ஆள் என எண்ணி உதைத்த காட்டு யானையின் நகம் பெயர்ந்தது என்று கூறுவதன் மூலம் நடுகற்கள் மனித வடிவில் நடப்பட்டது என்பதை இதன்வழி அறியலாம்.

“அத்த நடுகல் ஆளென உதைத்த

கரண யானை கதுவய் வள்ருகீர்

இருப்பனை விதக்கையில் ஒடியும்” (Annamalai, 2004)

இப்பாடலில், மனித வடிவில் எடுக்கப்பட்ட இவ்வகை கற்களைத் தலையில்லா முண்டம் போல் அமைக்கப்பட்டன என்றும், இவ்வகை கற்கள் மோட்டூர் உடையாநத்தம் ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. பூங்குன்றன் ஐயா கருத்துக்கு மாறாக இவை நவகண்டக்கற்கள் எனக் கருதுகிறார் (Poongundran, 2001).

“வில்லீன் டருஞ்சமந் ததைய நூறி

நல்லிசை நிறுத்த நாணுடை மறவர்

நிறை நிலை நடுகல் பொருந்தி இமையாது

இரைநசைஇக் கிடந்த முதுவாய்ப் பல்லி” (Annamalai, 2004)

இப்பாடலில் புகழை நிறுவி மாய்ந்த கரந்தை வீரர் நடுகற்களில் இசை நசைஇக் கிடைக்கும் முதுவாய்ப் பல்லி ஒலி எழுப்பும் அதாவது கண்ணிமைக்காது உணவிலே கருத்தூன்றிப் கிடந்த முதிய பல்லி தடையாய் ஒலியெழுப்பும் என்று கூறுகிறார். கரந்தை வீரனுக்கு நடுகல் நடப்பட்டதை அறியமுடிகின்றது.

நினைவுச் சின்னமாக எடுக்கப்பட்ட பெருங்கற்கால பதுக்கை வகையில் நினைவுச் சின்னத்தையும் அது தழை/இலைகளால் உயரமாகப் பொருத்தப்பட்டது எனவும் காட்சிப்படுத்துபடுகிறது.

"உலர்ந்த வம்பலர் உவல் இடு பதுக்கை நெடுநல்

யானைக்கு நிழல் அறிய கானம் ஆகும்” (Nagarajan, 2004)

இதில் மதுரை இளநாகனார் பதுகை சின்னம் பற்றிக் குறிப்பிடும் பொழுது வழிப்போங்கரை கொன்று உடல்களைப் புதைத்த கற்பதுக்கை மீது தழையால்/இலைகளால் மூடப்பட்டது என்றும், அது உயர்ந்த நல்ல யானைக்கு நிழலாகக் பயன்படும் என்கிறார். கற்பதுகைகள் இலைகளால் மூடப்பட்டதை அறியலாம்.

## முடிவுரை

தமிழகத்தில் கிடைத்த தொல்லியல் சான்றுகளின் அடிப்படையிலும், சங்கப்பாடல்களின் அடிப்படையிலும் பெருங்கற்படைச் சின்னங்கள் என்ற குத்துக்கல்லில் இருந்து அளவும் உயரமும் குறைந்த நடுகற்களாக மாறியதை அறிய முடிகின்றது. இதற்கு மதுரை மருதன் இளநாகனார் பாடல்கள் தக்க இலக்கியச் சான்றுகளாக விளங்குகின்றன. இவரது பாடல்களில் இருந்து நடுகல் பண்பாட்டின் முக்கியக் கூறுகளான கவரப்பட்ட ஆநிரைகளை மீட்ட கரந்தை வீரருக்கு எடுக்கும் நடுகல், பெருங்கற்படை சின்னம் நடுகல்லாக வளர்ச்சியடைந்த நிலை, ஓவியம் தீட்டி எழுதப்படும் நடுகல், எழுத்துக் கீறல் கொண்ட நெடுநிலைக்கல், எழுத்துப் பொறிப்புக் கொண்ட நடுகல் மனித உருவத்தை ஒத்ததாக எழுப்பப்பட்ட நடுகல் மூலம் பண்பாட்டின் பல நிலைகளை அறியமுடிகின்றது.

## References

Annamalai, S., (2004) Aganaanooru Moolamum Uraiyum, Koviloor madalayam, Koviloor, India.

Dandapani Swamigal, (1994) Pulavar Puranam, Ramananda Adigalar Foundation, Kumaraguru College of Engineering, Coimbatore, India.

Krishnamurthy, S., (2004) Nadukarkal, Meiyappan Pathipagam, Chennai, India.

Nagarajan, V., (2004) Kurunthogai moolamum uraiyum, New Century Book House, Chennai, India.

Poongundran, R., (2010) Tolkudi - Velir - Politics (Sengam Nadukars - A Study), Pudhumalar, Coimbatore, India.

Rajan, K., (2004) Tholiyal Nokil Sangakalam, International Institute of Tamil Studies, Chennai, India.

Subramanian, A., (2021) Pandaith Thamil Samookatthil Eranthoor Valipaadum Munnoor Valipaadum, New Century Book House, Chennai, India.

Subramanian, T., (2009) Tamilaga Tholiyalum Varalaarum, New Century Book House, Chennai, India.

Venkatasamy Nattar, N, M., (1975) Seminar on Hero Stone, State Department of Archaeology, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License